REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

'ஆதிக்க'த்தை அறிவிக்க புதிய ஏற்பாடு!

ஒவ்வொரு ஆண்டும் தென்னாட்டில் சில காலம் தங்கப்போவதாக ஜனாதிபதி இராஜேந்திரர் கூறியதைத் தழுவி, ஐதராபாத் மாநிலத்திலுள்ள பொலாராம் ரெசிடென்சி கட்டிடம் 'ராஷ்டிரபதி நிவாஸ்' ஆக மாற்றப்படுமாம்.

முதன் முதலாக 'கிருகப் பிரவேசம்' செய்யும் முறையில், ஆக. 14-ல் கர்நூலுக்கு வருகை தரும் இராசேந்திரர், இதில் தங்கியிருப்பாராம். ஐதராபாத் சர்க்காரால் அது ஜனாதிபதி இராசேந்திரருக்குக் கொடுக்கப்படுகிறதாம். சுமார் 80 ஏக்கர் நிலத்தில் தேவையான அளவிற்கு வசதிகளுடன், இம்மாளிகை கட்டப்பட்டுள்ளதாம்.

மலர் 3] சென்னை: ஆடி 25உ புதன் (10—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 26உ வியாழன் (11—8—55) [இதழ் 49

வடக்கையும் தெற்கையும் இணைக்கப் போகிறாராம்!

'தென்னாடு—வடநாடு' என்ற பேதத்தை நீக்க குடியரசுத் தலைவர் முயற்சிப்பாராம்!

புதுடில்லி, ஆக. 10—

தென் இந்தியா—வட இந்தியா என்ற பேதத்தை நீக்கி இரு பாகத்தினரிடையேயும் 'சகோதர சகஜ மனோபாவத்தை' நிரந்தரமாக நிலைபெறச் செய்ய குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத், தனி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிகிறது.

இந்த ஐக்கிய உணர்ச்சி சம்பந்தமான வழிகளை வகுக்கும் வகையில் அவர் தீவிரமாக முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் தலைவர் என்ற முறையைவிட, தமது சொந்த முறையில்தான் டாக்டர் பிரசாத் இதுபற்றி அக்கரை எடுத்து வருகிறார் என்று சொல்லப்படுகிறது.

என்ற பேதத்தை வளர்த்து வருவதாகவும், அந்த பேதத்தை அகற்ற டாக்டர் பிரசாத் சில மாற்று யோசனைகளைத் தரக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

புதுடில்லியில், 12-ந் தேதியன்று டாக்டர் பிரசாத் இந்தி கண்காட்சி ஒன்றைத் திறந்துவைக்கிறார். அதுபோது அவர் நிகழ்த்தும் உரையில், தமது கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

பதவியிலிருந்து விலகி ஓய்வு பெறும் நாட்களில், தென்னாட்டிலேயே தங்கியிருந்து, ஐக்கியப்பாட்டிற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டுமென்று அவர் எண்ணியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தென்னாட்டு மொழிகளுக்கு வடநாட்டுப் பல்கலைக் கழகங்களில் இடம் இருக்கவேண்டும் என்றும், டில்லி, அலிகார், காசி போன்ற மத்திய சர்க்கார் பிடியிலிருக்கும் பல்கலைக் கழகங்களில் முதன்முதலில் இந்த வாய்ப்பு வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

பேதத்தின் அடிப்படையே புரியாதவர்!

இந்தி பற்றிய தகராறுகள் தான்(!) வடநாடு—தென்னாடு

என்ன காரணம்?

புதுடில்லி, ஆக. 5—

'வருகிற பொதுத் தேர்தலுக்கென நாட்கள் எதுவும் இறுதியாக முடிவு செய்யப்படவில்லை,' என்று, சட்ட அமைச்சர் சி. சி. பிஸ்வாஸ் தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி, சட்டசபை உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், தேர்தலுக்கான நாட்களை வரையறுக்க, மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கையை சர்க்கார் எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகவும், அவர் கூறியிருக்கிறார்.

ஒழுங்கு நிலவுவதற்கு உண்ணாவிரதம்!

மத்திய பிரதேச மாநிலத்தில் தவறுகளும், சட்டவிரோதமான செய்கைகளும் நிறைந்துள்ளதை எதிர்த்து, மத்திய பிரதேச மாநில சிவில் உரிமை யூனியனின் உறுப்பினரான பாபுலால் பாரேட் என்பவரும், அவருடன் மற்றும் இருவரும், இராஜ்கோட்டையிலுள்ள மகாத்மா காந்தியார் சமாதிக்கு அருகில் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்துள்ளனராம்.

நாட்டில் ஒழுங்கு நிலவ வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் அவர்களது உண்ணாவிரதம் இருக்கும் என நம்பப்படுகிறதாம்.

விசாகைக்கு ஒரு தொழில் நிலையம்

புதுடில்லி, ஆக. 9—

இரயில் பெட்டிகளைப் பொருத்துவதற்கான நிலையம் ஒன்று விசாகப்பட்டினம் இரயிலடியில் கட்டப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது

வெளி நாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகும் இரயில் பெட்டிகளனைத்தும் பாதியுடைந்தபோன நிலையிலேயே இருக்கின்றனவாம். சௌராஷ்டிர பகுதியில் ஓகா எனும் இடத்தில் மீட்டர்கேஜ் வண்டிகளைப் பொருத்துகின்ற இதேபோன்ற மற்றொரு நிலையம் ஏற்கனவே இயங்கி வருவதாயும் தெரிகிறது

இந்திய இரயில்வேக்களுக்காகச் சுமார் 9,000 பிராட்கேஜ் இரயில் பெட்டிகளைப் பொருத்துவதற்கான வேலைக்கு, கல்கத்தாவிலுள்ள நிறுவனம் ஒன்று காண்டிராக்ட் எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

சுண்டைக்காய் கால் பணம்-சுமை கூலி முக்கால் பணம்!

லட்சத்தீவிற்குப் போய் வந்த கவர்னரின் தண்டச் செலவு ரூ. 44,000!

சென்னை வரி செலுத்துவோர் தலையில் சுமத்தப்படுகிறது!

சென்னை, ஆக. 9—

"கடந்த 1954 டிசம்பரில் லட்சத் தீவுகளுக்கு சென்னை கவர்னர் பிரகாசா சென்று வந்ததற்கு ரூ. 44,016-3-0 செலவாயிற்று,"

என்று மந்திரி பரமேஸ்வரன் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

மினிகாய் தீவில் உள்ள கலங்கரை விளக்கில், 'யூனியன் ஜாக்' கொடி பறந்துகொண்டிருப்பது உண்மைதான் என்றும், அந்தக் கலங்கரை விளக்கு இங்கிலாந்து நாட்டின் போக்குவரத்து இலாகாவின் நிர்வாகத்தில் உள்ளது என்றும், அதனை இந்திய சர்க்காரின் நிர்வாகத்திற்கு மாற்றுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாயும், இங்கிலாந்து சர்க்கார், அந்தத் தீவினை இந்திய சர்க்கார் வசம் ஒப்படைக்கும் அதிகாரமாற்றத்திற்குச் சம்மதித்து விட்டதாயும், சட்டபூர்வமான மாற்றம் இங்கிலாந்து மக்கள் சபையில் மேற்கொள்ளப்படும் என்றும், மந்திரி சட்டசபையில் பதில் தந்திருக்கிறார்.

மினிகாய் தீவு, இந்த மாநிலத்தின் ஒரு பகுதிதான் என்றும், இந்திய அரசியல் சட்டம் அங்கு செல்லத்தக்கதுதான் என்றும் மந்திரி பதிலளித்திருக்கிறார்.

மத்திய சர்க்கார் யோசனையை ஆந்திரம் ஏற்கவில்லை?

புதுடில்லி, ஆக. 9—

மாநிலங்களுக்கிடையே விற்பனை வரி விதிப்பை நிறுத்திவிட வேண்டுமென்பதற்கு, இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மாநிலங்களும் தங்கள் தங்கள் ஒப்புதலைத் தந்துள்ளனவாம்.

ஆந்திர மாநிலம் இதற்கு ஒப்பம் தரவில்லை என்றும், எனினும் இந்த முக்கியமான பிரச்சினையில் ஆந்திரா தனது ஒப்புதலைத் தந்து மற்ற மாநிலங்களுடனும் ஒத்து நிற்கும் என நம்பப்படுவதாகவும் தெரிகிறது.

எல்லா மாநிலங்களிலும் ஒரே விகிதத்திலேயே வரி விதிப்பு இருக்க வேண்டுமென்பதற்காகவே மாநிலங்களிடையே வரி விதிப்பு முறையைக் கைவிடவேண்டியதற்கான நோக்கம் என்று கூறப்பட்டுள்ளது.

டெல்லி நகரத் தெருக்களுக்கு பெயர் மாற்றம்!

வெளி நாட்டவர் பெயர்களுக்குப் பதிலாக இந்தியர்கள் பெயர் சூட்டப்படும்

இந்தியப் பிரதமர் நேருவின் யோசனைப்படி ஏற்பாடு

புதுடில்லி, ஆக. 8—

வெளிநாட்டவரின் பெயர்களைக் கொண்டுள்ள டில்லி நகரின் பல தெருக்களுக்கு, பெயர் மாற்றியமைக்கப்படும் என்று கூறப்படுகிறது

பிரதமர் நேருவின் யோசனைப்படியே இது நடைபெறுகிறதாம்

பிரதமர் நேரு, டெல்லி மாநில மந்திரிகள் மூவர், டில்லி, புதுடில்லி நகரங்களின் சபைத் தலைவர்கள் ஆகியோரது மாநாடு ஒன்றைக் கூட்டி, வெளிநாட்டவரின் பெயரில் உள்ள தெருக்களுக்கு, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட இந்தியர்கள், சரித்திரப் புகழ் பெற்றவர்கள் ஆகியோரின் பெயர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கோருவார் என்றும் தெரிய வருகிறது.

வேலைநிறுத்தம்செய்த ஆசிரியர்களை வேலையினின்றும் நீக்கும் கொடுமை

கயா நகர மன்றத்தின் ஆகாத போக்கு

கயா, ஆக. 9—

கயாவில், நகர மன்றத்தின் நிர்வாகத்தைச் சேர்ந்த மொத்தம் 75 ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் 350 ஆரம்ப ஆசிரியர்கள், தாங்கள் சென்ற ஜூலை திங்கள் 27-ந் தேதிமுதல் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக தற்போது, நகர மன்றத் தலைவரால் வேலையினின்றும் நீக்கப்பட்டு, வேலை இழந்துள்ளனர்.

நீக்கப்பட்ட இந்த ஆசிரியர்களுக்குப் பதிலாக, ஏற்கனவே, 100 ஆசிரியர்கள் புதிதாக நியமனம் பெற்றுள்ளனராம்.

வேலையினின்றும் நீக்கப்பட்ட மேற்படி 350 ஆசிரியர்களும் ஒன்றுகூடி, வருகிற 12-ந் தேதி முதல், நகர்மன்ற அலுவலகத்தின் முன்னர் அமைதியான முறையில் 'சத்தியாக்கிரகம்' செய்வது என முடிவு செய்துள்ளனராம்.

தங்களுக்குத் தரப்பட்ட ஊதியம், பஞ்சப்படி ஆகியவை காலங்கடத்தப்படாமல் உரியகாலத்தில் கொடுக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தியும், தங்கள் 'பிராவிடண்ட் பண்டு' நிதியைப் பத்திரமாக வைத்துக் கொள்ளக் கோரியுமே அவர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனராம்.

ஆக. 16-ல் விலகுகிறார்

ஆக. 16-ந் தேதியன்று, சபாநாயகர் பதவி, சட்டசபை உறுப்பினர் பதவி ஆகியவற்றை தாம் இராஜினாமா செய்யப்போவதாக, சென்னை சட்டசபையில் ஜே. சிவசண்முகம் அவர்கள் அறிவித்தார்.

பக்ஷி குலாம் சர்க்காருக்கு எதிராக...

காஷ்மீர் 'மக்கள் சக்தி' உருவாக்கப்படுகிறது?

ஷேக் அப்துல்லா சிறைப்பிடிக்கப்பட்ட 2-ம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி நிகழ்ச்சிகள்

ஷேக் அப்துல்லா காஷ்மீர் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நிகழ்ச்சியினை ஒட்டி, இந்த கிழமை முழுதும், காஷ்மீரில் மகத்தான ஆர்ப்பாட்டங்கள் மிகுந்த அரசியல் சம்பவங்கள் நடைபெறவிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக, அப்துல்லாவையும், பாகிஸ்தானையும் ஆதரிக்கும் வட்டாரத்தினர், பொதுக்கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தி வருகின்றனர்.

அப்பொழுது, பக்ஷிகுலாம் சர்க்காருக்கு எதிராக திரண்டெழுமாறு, அவர்கள், மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களை ஒட்டி சர்க்கார் போதுமான முன்னெச்சரிக்கையுடன் இருப்பதாகவும், ஏற்கனவே ஊர்வலங்கள் நடத்துவதைத் தடுத்திருப்பதாயும் சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

'பொதுஜன அமைதிக்கு பங்கம் விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தேசிய மாநாட்டுத் தலைவர்கள், நாடெங்கும் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளுவர் என்றும் கூறப்படுகிறது.

'ஆண்களை நம்பியே பெண்கள் வாழ வேண்டியதில்லை!'

'ரட்சபந்தன்' மூடப் பழக்கத்தை எதிர்த்து பெண்கள் இருவர் நடவடிக்கை

பாடியாலா, ஆக. 9—

"என்னை நானே பாதுகாத்துக் கொள்ள முடியும்; 'பிறரை நம்பித்தான் பெண்கள் வாழ முடியும்,' என்ற கொள்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை,"

என்று கூறி, ஒரு பெண்மணி, தனது சகோதரன் கையில் 'ரட்ச

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 10—8—'55 புதன்

'ஒற்றுமை'க்கு ஒரு யாத்திரை!

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதென்பது உயர்ந்த பண்புதான்; ஆனால், இருக்கின்ற வேற்றுமைகளை பரஸ்பரம் புரிந்துகொண்டு அவைகளை அனுமதிக்கும் மனப்போக்கிலிருந்தே 'வேற்றுமையில் ஒற்றுமை' கீதம் ரசம் குன்றமல் எதிரொலிக்கும் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஒற்றுமை என்பதின் உண்மையான பொருள் எதுவாக இருந்தாலும், ஒருவரை ஒருவர் மதித்து, அவரவர் கருத்துக்களுக்கு மதிப்பு வைத்து நடப்பதிலிருந்தே 'ஒற்றுமை' நிலவும் என்பது நடைமுறையில் இருந்துவரும் உண்மையாகும்.

சரிசமமான அந்தஸ்துடன் இயங்காத 'ஒற்றுமை' இயந்திரம், போலி மேற் பூச்சுடன் இயங்குவதாகும்; மிரட்டலுக்கும், உருட்டலுக்கும் பணிந்து கொடுக்கும் அடிமை மனப்பான்மையின் மேலான பண்பாகும்.

இப்படி அதட்டுவோன் குரலுக்கு அடிபணியும் தன்மைதான் உண்மையான ஒற்றுமையின் உறுதியான அஸ்திவாரம் என்கிற ரீதியிலேயே தமிழகத்தின் அரசியல் வட்டாரம் நாட்டு மக்களிடம் பிரசாரம் செய்கிறது; அந்தப் பிரச்சாரத்தின்படி தானும் நடந்து காட்டுவதாக சில சமயங்களில் நடித்தும் காட்டிவிடுகிறது.

சென்னை மாகில கவர்னரின் சட்டசபைப் பேச்சைத் தொடர்ந்து, உறுப்பினர்கள் எழுப்பிய அதிருப்திக் குரலுக்கு பதிலளித்த நேரத்தில், நமது நிதி அமைச்சரும், மராமத்து அமைச்சரும் சோக நடிப்பின் எல்லையையே அடைந்துவிட்டனர்; அந்தச் சோக கட்டத்தின் துயரமயமான சாயலிலேயே சென்னை மாகிலத்தின் ஐந்தாண்டு திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தீட்டிக் காட்டினர்.

அந்தத் திட்டம், சென்னை மாகிலத்தின் தேவைக்கும், சுபிட்சத்தும் எவ்வளவுதூரம் நலம் பயக்கக்கூடியது என்பதை விளக்கிக் கொண்டிருப்பதைவிட, "அவலச் சுவையில் தோய்த்தெடுத்த இசையின் பண்ணொலிபோல" நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்று சொன்னாலே போதுமானது.

ஒரு மாகிலத்திற்கான ஐந்தாண்டுத் திட்டமா இது? உலகத்தின் எட்டாவது அந்தஸ்தைப் பெறக்கூடிய தகுதி பெற்ற தென்னகத்தின் ஐந்தாண்டுத் திட்டமா இது?

ஒற்றுமை என்ற பஜனையை ஜபித்துக் கொண்டே, போட்ட அந்தத் திட்டம் வேற்றுமையைத் துல்லியமாகக் காட்டிக் கொடுத்து விடுவதாக அல்லவா இருக்கிறது?

பம்பாய் மாகில முதலமைச்சர், "என் மாகிலத்தில் வேலையில்லை என்று எவனும் வாய் திறக்கக்கூடாது; அதற்கான திட்டங்களைத்தீட்டிவிட்டேன்" என்று சூள் உரைக்கிறார்.

வங்காள அரசாங்கம் இன்னும் கொஞ்ச நாளில் ஜப்பானுடன் போட்டி போடும் அளவுக்கு தொழிலையும் சுபிட்சத்தையும் வளர்த்து வருவதாக பூரிப்புடன் சொல்லிக் கொள்கிறது.

பீகார்—ம. பி. அரசாங்கங்கள், கீழ்ப் பகுதி உலகத்தின் இரும்புத் தொழில் மார்க்கட்டையே விலை பேசும் அளவுக்கு கனரகத் தொழில்களில் கவனம் செலுத்துகின்றன.

தென்னகத்தின் மாகிலங்களோ, கிடைக்கின்றகவளத்தையாவது ஒழுங்காகக் கிடைக்க அருள் செய்யுங்கள், என்று கெஞ்சும் பாவனையில் டெல்லி நோக்கித் தவங்கிடக்கின்றன. இந்த இழிநிலை மாறுவது எப்போது என்று நம் போன்றவர்கள் கவலைப்படும் இந்த நேரத்தில், சென்னை மாகில சட்டசபையில் தயார் செய்யப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தைச் சுமந்து கொண்டு, முதலமைச்சர் காமராசர் தலைமையில் மூவர் கொண்ட குழு ஒன்று, டெல்லி நோக்கி யாத்திரை புறப்படுகிறது.

இவர்கள் கொண்டுபோகும் திட்டம் அங்கு எவ்வளவு தூரம் சின்னாபின்னப்படுத்தப் படுகிறதென்பது பொறுத்துப் பார்க்க வேண்டிய விவகாரமாகும்.

என்றாலும் அதிலிருந்து, 'ஒற்றுமை'யின் இலட்சணம் எவ்வளவுதூரம் டெல்லியில் செயல் புரிகிறதென்பது வெளிச்சமாகிவிடும்.

'ஒற்றுமை'யைப் பற்றி இங்கு வாய் கிழியப் பேசும் அமைச்சர் சுப்பிரமணியம் போன்றவர்கள், மற்ற மாகிலங்கள் தயாரித்த திட்டங்களுக்கும், தான் தயாரித்துக்கொண்டு போகும் திட்டத்துக்கும் இடையில் உள்ள தாரதம்மியங்களை உணர்ந்து பார்க்க வேண்டும். அதேபோல மற்ற மாகிலங்களின் திட்டங்களிலே காட்டிய அக்கரையும், அனுதாபமும் சென்னைத் திட்டத்தில் டெல்லி காட்டுகிறதா என்பதை கூர்ந்து கவனிக்க வேண்டும். அனைத்துக்கும் மேலாக வடக்கும்—தெற்கும் ஒற்றுமையுடன் இருப்பதற்கான சூழ்நிலை டெல்லிப் பேரரசின் நடவடிக்கைகளிலே இருக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

"இந்தி நுழைந்தால், அந்த மொழி அறியாத மக்கள் பாதிக்கப்படுவர்" என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார். இது வேற்றுமையை ஒப்புக்கொண்ட ஒற்றுமை கீதம்!

"இந்தியாவின் ஒற்றுமைக்காக கண்டிப்பாக இந்திமொழி பயிலத்தான் வேண்டும்"— இப்படியும் அதே அமைச்சர் பேசியிருக்கிறார்—இது அளவுக்கு மீறிய அடிமை மனப்பான்மையில் எழுந்த பயங்கலந்த கூக்குரல்!

இந்த இருவித மனப்போராட்டத்திலே எந்த மனம் சொல்வதை முன்மாதிரியாக வைத்து, தங்களது 'யாத்திரை'யின் 'புனிதத் தன்மை'யைக் காப்பாற்றப் போகிறது சென்னை அமைச்சர் குழு?

ஒற்றுமை இந்தியத் துணைக் கண்டத்துக்கு மட்டுமல்ல— உலகத்துக்கே தேவையான ஒன்றுதான்; ஆனால், இருக்கப்பட்ட வேற்றுமைகள் என்ன என்பதை கண்ணியமான முறையைக் கடைபிடித்து அங்கீகரிக்க வேண்டும்.

வேற்றுமையின் பொருள் புரியாத வரையில், ஒற்றுமை வளர்வதற்கு வழி கிட்டாது.

'டெல்லி யாத்திரை' போகும் அமைச்சர் குழு, இந்தக் கருத்தினையும் உள்ளத்தில் ஏந்திச் செல்லட்டும்.

நாகர்கள் கிளர்ச்சியை ஒடுக்க கூட்டு நடவடிக்கை

1,000 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாம்!

கௌஹாத்தி, ஆக. 9—

நாகர்களின் கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்க அசாம் போலீசாரும்—அசாம் துப்பாக்கிப் படையினரும் கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். தற்போது நாகர் மலைக் குன்று பகுதிகள் முழுமையிலும், சர்க்காரே நேரடி கண்காணிப்பில் இருந்து வருகின்றனர்.

'தொல்லை தரும் பகுதிகள்' என்று கருதப்பட்ட இடங்கள் அனைத்தும் சர்க்காரின் நேரடி பொறுப்பிலேயே இருந்துவருவதாக அசாம் மாகில சர்க்கார் பிரதம காரியதரிசி டட்டா கூறியிருக்கிறார்.

சென்ற ஜூலைத் திங்கள் 15-ந் தேதியிலிருந்து இதுவரையிலும் அப்பகுதிகளில் எந்த விதமான கைகலப்பு அல்லது மோதுதல் நிகழவில்லை என்றும், இதுவரையிலும் நாகர்களிடமிருந்து 15 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், அத்துடன் சில நாகர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

மேலும் தற்போதைய நடவடிக்கைகளின் விளைவாக இதுவரையிலும் நாகர்களில் யாருமே கொல்லப்பட்டது கிடையாது என தாம் நம்புவதாகவும், அவர் கூறியிருக்கிறார்.

மேலும், அந்த நாகர்கள், பயமுறுத்தத்தக்க வகையில் பல இராணுவப் பயிற்சி முகாம்களை அமைத்துள்ளனர் என்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதென்றும், அவர்கள், சுமார் 4,000 முதல் 7,000 அடி உயரத்திலுள்ள மலைக் குன்றுகளில் ஒளிந்து வசித்து வருகிறார்கள் என்றும், அவர் தெரிவித்திருக்கிறார்.

அசாம் போலீஸ், அசாம் துப்பாக்கிப் படைகளைச் சேர்ந்த சிலர், அந்த நாகர்கட்கு இராணுவப் பயிற்சி அளித்து வருவதாகவும் நம்பப்படுகிறதாம்!

சென்ற 1950, 51 ஆகிய இரண்டாண்டு காலத்தில், மணிப்பூரில் 1000-த்திற்கு மேற்பட்ட துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சென்ற இரண்டாவது உலக யுத்தத்தின்போது துருப்புகள் மணிப்பூரிலும் நாகர் மலைக் குன்றுகளிலும் விட்டுச் சென்ற துப்பாக்கிகளே அவைகள் என்றும் அசாம் கவர்னரின் துணை ஆலோசகரான யூசப் அலி என்பார் கூறியிருக்கிறார்.

இந்திய சர்க்கார் ரயில்வேக்களில், 1954 மார்ச் 31-ந் தேதி வரை பொது மக்கள் உபயோகத்துக்குப் பயன்படுத்தப்பட்டுவந்த பிராட்கேஜ் வாகன்களின் மொத்த எண்ணிக்கை 1,55,079 என அறிவிக்கப்பட்டுள்ளது.

'நிலச் சீர்திருத்தத்தால் நேர்மாறான விளைவுகள் ஏற்படக்கூடாது'

'விவசாயிகள் நிம்மதியாக வாழ்வதற்கு உத்திரவாதம் அளிக்கப்பட வேண்டும்'

சென்னை மேல் சபையில் ஓ. பி. இராமசாமி

"நிலச் சீர்திருத்தங்களை தக்க முறையில் செய்தால்தான், **100-க்கு 10** பேரையாவது வறுமையிலிருந்து காப்பாற்ற முடியும்; சர்க்கார் எந்த நோக்கத்தோடு ஒன்றைச் செய்கிறார்களோ அதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படுகின்றன; பலாபலன்கள் எப்படியிருக்கும் என்று பார்த்துச் செய்ய வேண்டும்; நிலத்தைப் பிரித்துக் கோடுத்து, விவசாயிகளின் நிலையை உயர்த்திவிட முடியுமா?"

—என்று, ஓமந்தூர் இராமசாமி அவர்கள், சென்னை மேல்(சட்ட)சபையில், சாகுபடிசெய்யும் விவசாயிகள் பாதுகாப்பு (சென்னை) மசோதாமீது பேசுகையில் கேட்டார்.

தொடர்ந்து அவர் பேசினார்:—

"நல்ல நோக்கத்துடன்தான், கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட்டது; ஆனால், விவசாயிகளுக்குக் கடன் கிடைக்காமற் போய்விட்டது; கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 5 கோடிதான் கடனாகக் கொடுக்கப்படுகிறது; ஆனால், உரம் வாங்கவும், இதர வேலைகளுக்கும் விவசாயிகள் கடன் வாங்க வேண்டும்; கடன் சட்டத்தால் ஒன்று இரண்டாக அவர்கள், கடன் பத்திரம் எழுதித் தர வேண்டியுள்ளது; அரை வட்டிக்குப் பதில் மூன்றே முக்கால் வட்டி, முதலிலேயே எடுத்துக்கொள்ளப்படுகிறது; எனவே, எதையும், சர்க்கார் யோசித்துச் செய்யவேண்டும்."

"நம் நாட்டில் ஆயிரத்திற்கு ஒன்றிரண்டு விவசாயிகள்தான் நல்ல நிலைமையில் வாழ்க்கை நடத்துகிறார்கள்; மற்றவர்கள் நிலையை உயர்த்த, அவர்கள் ஏதாவது கைத் தொழிலும் கூடச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்; இதற்கு, இன்றைய கல்வி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும்; உத்தியோகங்களுக்குச் சண்டை போடுவதற்குத்தான் இன்றைய கல்வி முறை உதவுகிறது."

"இருக்கிற நிலத்தை வைத்துக் கொண்டு, சௌகரியமாக எவ்வளவு பேர், எப்படி வாழ்க்கை நடத்த முடியும்—என்று திட்டமிட வேண்டும்; அதேபோன்று நிலவுடைமைக்கு வரம்பு ஏற்படுத்துவதில், எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு நிர்ணயிப்பது என்று கவனித்துச் செய்ய வேண்டும்; அன்றியும், அடிக்கடி பயிர்கள் 'சாவி'யாகிப் போவதால், அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு உத்திரவாதம் அளிக்க முடியுமா என்றும் பார்க்க வேண்டும்."

★

நோக்கம் நல்லதானால்!

டாக்டர் வி. கே. ஜான், இது பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நிலச் சீர்திருத்த விவகாரங்களில் உலகத்தின் மற்ற பகுதிகளில் பின்பற்றப்படும் முறைகளைக் கையாள வேண்டும்; நிலச் சீர்திருத்தங்களை, ஓராண்டிற்குத் தள்ளிப் போடவே, சர்க்கார், இம்மசோதாவைக் கொண்டுவந்துள்ளனர் போலும்! அடுத்த பொதுத் தேர்தலுக்குள், நிலப் பிரச்சினையை இம்மந்திரி சபை தீர்க்குமென எனக்குத் தோன்றவில்லை; சர்க்காரின் நோக்கம் நல்லதானால், நிலத்தை சாகுபடி செய்வோரிடம் ஒப்படைத்து, சொந்தக்காரர்களுக்கு தவணை முறையில் நஷ்ட ஈடு தர ஏற்பாடு செய்ய வேண்டும்; இதைச் செய்வதற்கு, நிலச் சொந்தக்காரர்களைக் கண்டு சர்க்கார் பயப்படுகிறது."

30 பேர் கொண்ட கூட்டுக் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற தனது பிரரேபணையின் விவாதத்திற்குப் பதிலளிக்கையில், மந்திரி மாணிக்கவேலர், நிலச் சீர்திருத்தங்களை ஒத்திப்போட சர்க்கார்முயற்சி செய்வதாகக் கூறப்பட்டதை மறுத்தார்; குடியானவர்கள், தந்திரமாக பல இடங்களில் வெளியேற்றப்படுகின்றனராதலால், இதை சர்க்கார் பார்த்துக்கொண்டிருக்க முடியாதென்றார்; கிராமக் கடன் வசதிகளை அதிகரிக்க சர்க்கார் வேண்டியனவற்றைச் செய்து வருகிறது என்று குறிப்பிட்டார்; பல ஆண்டுகளாக இருந்தநிலையை திடீரென்று மாற்றிவிடுவது அல்லது எளிதானது அல்ல என்றார்.

தஞ்சை (பண்ணையாள் பாதுகாப்பு) சட்டத்தை மாகிலம் பூராவுக்கும் பரப்ப முடியவில்லையென்றும், ஆகவேதான், குடியானவர்கள் அநியாயமாக வெளியேற்றப்படுவதைத் தடுக்க, சாகுபடி செய்யும் விவசாயிகள் பாதுகாப்பு மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதென்றும் மந்திரி கூறினார்.

பிரரேபணையை சபை அனுமதித்தது.

ரூ. 12 கோடி செலவில் துர்காபூர் திட்டங்கள்

பலருக்கு வேலை தருவதற்கு வாய்ப்பு கிடைக்குமாம்!

கல்கத்தா, ஆக. 10—

நன்றாக எரிக்கப்படாத நிலக்கரியை எரிக்கும் உலை, மேற்கு வங்க மாகிலம் முழுமையிலும் நிலக்கரி வாயுவை விநியோகம் செய்வதற்கான ஒரு அமைப்பு, 60,000 - கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆலை ஆகிய இம் மூன்றுமே மேற்கு வங்க மாகில சர்க்கார் ரூ 12 கோடி செலவில் திட்டமிட்டுத் துவங்கியுள்ள துர்காபூர் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் என்று தெரிய வருகிறது.

இந்தத் திட்ட வேலைகள் துவங்கப்பட்டுள்ளதால், மாகிலத்தில் பலருக்கு அதிகப்படியான அளவிற்கு வேலை வசதி அளிப்பதுடன் மாகிலத்தின் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

நிலக்கரி உலை விரைவிலேயே துர்காபூரில் அமைக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

அதுவும் அங்கேதான்!

புதுடில்லி, ஆக. 9—

மீன் பிடிக்கும் விசைப் படகுகளை ஓட்டுவதற்குப் பயிற்சியளிப்பதற்குரிய நிலையமொன்று, இந்தியாவில், முதன் முதலாகப் பம்பாய்க்கு அருகில் உள்ள சத்பதியில் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பம்பாய் மாகிலத்திலிருந்து 10 பேர்களுக்கும், சௌராஷ்டிரத்திலிருந்து 10 பேர்களுக்கும்-ஆக மொத்தம் 20 பேர்களுக்கு, இந்நிலையத்தில், 6 மாத காலத்துக்குப் பயிற்சி அளிக்கப்படும். வருகிற ஆண்டில் இம்மாதிரியான நிலையங்களை கொச்சியிலும், தூத்துக்குடியிலும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்!

இதுவரையில், புராதன காலத்திய சாதனங்களை உபயோகித்தே, கடற்கரையோரங்களில் மட்டும் மீன் பிடிப்பு நடைபெற்று வந்திருக்கிறது. அபிவிருத்தி செய்யப்பட்ட மீன்பிடி கருவிகளையும், சாதனங்களையும் உபயோகிப்பதன் மூலம், கடலில் வெகு தூரம் சென்று, அதிக நேரம் வரை மீன்களை பெரும் அளவில் பிடிக்கலாம்.

One side of the page is dark

அணுசக்தியால் கப்பல் இயங்குமா?

இயற்கையின் ஆற்றலைப் பயன்படுத்தும் முயற்சியில் மற்றுமோர் புரட்சி!

நிலத்தில் செல்லவும், நீரில் நீந்தவும், வானில் பறக்கவும் மனிதன் இயற்கையின் ஆற்றலைப் பயன்படுத்திப் பொறிகள் பல கண்டு வருகின்றான். காற்றால், பாய் விரித்துச் சென்ற படகுகள் பழங்கதையாகி, நிலக்கரியால் இயங்கும் கப்பல்கள் வந்தன; நிலக்கரியை எரிமூட்டி நீரை ஆவியாக்கி, நீராவியின் ஆற்றலால் கப்பலை இயக்கலாம் என்று மெய்ப்பித்துக் காட்டி, ஒன்றரை நூற்றாண்டு ஆகிவிட்டது; இன்று, கப்பலோட்டும் துறையில் மற்றோர் புரட்சி தோன்றியுள்ளது!

'அணுவின் ஆற்றலால் கப்பல் ஓட்டலாம்,' என எண்ணி, அணுசக்தியினால் இயங்கும் வியாபாரக் கப்பல் ஒன்று கட்டுவதற்கு அமெரிக்கா வகுத்துள்ள திட்டம் ஒரு புரட்சித் திட்டம்; இதனால் ஏற்படும் மாறுதல், 'கப்பலோட்டும் துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள எல்லாப் புதுமைகளையும்விட புதுமையாக இருக்கலாம்,' என எஞ்ஜினீயர்களும், விஞ்ஞானிகளும் எண்ணுகின்றனர்.

அமெரிக்காவின் கனவில் பதிந்த அணுசக்தி வியாபாரக் கப்பல், 1957-ம் ஆண்டுக்குள் நனவாகி, அலைகடல் மேல் இயங்கிக் கொண்டிருக்கலாம்; எனினும், 'அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும்' என்று அரசாங்கத்தார் நாள் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

'சமாதான அணுசக்திக் கப்பலை இரண்டு ஆண்டுகளில் கட்டி முடித்துவிடலாம்,' என்பது அமெரிக்க அணுசக்திக் குழுவிலுள்ள நிபுணர் ஒருவர் கருத்து.

அணு சக்தியால் கப்பல் ஓட்டுவதன் அனுகூலம் என்ன?

எரிபொருளுக்காக இடை தங்காமல், அக்கப்பல், பல்லாயிரக் கணக்கான மைல்களைச் சுற்றி வரலாம்; இது ஒரு அனுகூலம். இதற்குக் காரணம், அளவில் சிறிய அணுசக்தி — எரிபொருள் அளவில் பெரிய சக்தியைக் கொடுப்பதேயாகும்; 3,000 டன் நிலக்கரி கொடுக்கும் சக்தியை, இரண்டே இரண்டு பவுண்டு 'யுரேனியம்' கொடுத்துவிடும்.

எரி பொருளுக்காக இடையிலே பல துறைமுகங்களில் தங்குவதால் ஆகும் செலவும், நேரமும் அணுசக்திக் கப்பலுக்கு இல்லை, அன்றியும், அதன் எரி பொருளுக்கு ஆகும் செலவும் மற்றக் கப்பல்களின் எரிபொருளுக்கு ஆகும் செலவைக் காட்டிலும் குறைவாக இருக்கும் எனத் தோன்றுகிறது. ஆயினும், கப்பலுக்கு எரிபொருள் செலவு மட்டுமல்ல; இயந்திரத்தைக் கட்டும் செலவு, அதனைப் பின்னர் பேணும் செலவு இவற்றையும் பார்க்கவேண்டும். எனினும் இன்றுள்ள கப்பல்களைக் காட்டிலும் அதிகச் செலவாகாத அணுசக்திக் கப்பல்களைக் கட்டி ஓட்டலாம்,' என்று கப்பல் கட்டுவதில் அனுபவம் முதிர்ந்தோர் கருதுகின்றனர்.

அணுசக்திக் கப்பலில் எரிபொருளாகும் அணுசக்திப் பொருளை வைப்பதற்கு சிறிது இடமே போதும்; ஆதலால், மிஞ்சும் இடம், சரக்குகளுக்கும் பிரயாணிகளுக்கும் கிடைக்கும்; வருமானமும் பெருகும். இதுவும் அணுசக்தி கப்பலால் ஏற்படும் அனுகூலமாகும்.

அணுசக்தியால் கப்பல் ஓட்டுவது பற்றிக் கப்பல் ஓட்டுவோர் கருத்தென்ன? பலர், இதனைப் பற்றி அதிகமாகப் பேசுவதில்லை; பிறர், 'அணுசக்திக் கப்பல் எப்படியும் வந்துவிடும்,' என்று சற்றும் ஐயமின்றிக் கூறுகின்றனர்.

'நீராவிக் கப்பல் வரும்' என்று கூறியபோது பலர் சிரிக்கத்தானே செய்தார்கள்—இல்லையா' என்று ஒருவர் நினைவூட்டுகிறார்; அதுவும் உண்மைதான்!

★

அணுசக்தியால் இயங்கும் விமானம்!

இன்னும் 10 ஆண்டுகளில் அணுசக்தியால் இயங்கும் விமானங்கள் ஏற்படக்கூடுமென கூறப்படுகிறது.

இத்தகைய விமானங்கள், அட்லாண்டிக் சமுத்திரத்தை இரண்டு மணி நேரத்தில் கடந்து செல்லக் கூடுமென்றும், ஒலியின் வேகத்தை விட மூன்று மடங்கு வேகத்தில் செல்லக்கூடிய இவ்விமானங்கள் நல்ல சக்தி வாய்ந்தவையாக இருக்குமென்றும் அறிவிக்கப்படுகிறது.

மனித வர்க்கம் நிர்மூலமாக......!

நியூயார்க் விஞ்ஞானி கருத்து

"துருவப் பகுதியிலுள்ள பனிக் கட்டிகள்மீது அணு, நீர்வளிக் குண்டுகளைப் போட்டால் போதும்; அதுவே, உலகில் மனித வர்க்கத்தைப் பூண்டோடு அழிப்பதற்கான 'இலகுவான' வழியாகும்."

என்று, நியூயார்க் விஞ்ஞான நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த டாக்டர் விக்டர் லெவின் என்பவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறு செய்வதால், பல இலட்சக் கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் தண்ணீர் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டு மாண்டுபோவார்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

"இதனைச் செய்வதற்கு, அமெரிக்கர்களும், ரஷ்யர்களும் வேண்டிய அளவுக்கு அணு, நீர்வளிக் குண்டுகளைப் பெற்றுள்ளனர்; வீசப்படுகின்ற இந்தக் குண்டுகளிலிருந்து மிக அதிகமான அளவில் வெப்பம் உற்பத்தியாகிறது; அந்த அளவு அளவிடத்தக்க வெப்பத்தைக் கொடுக்கும் குண்டுகளை, பனிக் கட்டி பிரதேசங்களாகிய துருவப் பகுதிகளில் வீசினால், தண்ணீர் பிரவாகத்தினாலேயே பெரும்பான்மையான மக்கள் இறந்துபோவார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியின் சிரிப்புக்கு காரணம் என்ன?

ஜப்பானின் பிரதம அமைச்சராக யோஷிடா என்பவர் இருந்தபோது பிரிட்டனுக்குச் சென்றிருந்த காலை, பிரிட்டிஷ் அரசி எலிசபெத்திடம், காமன்வெல்த்தில் ஜப்பானும் ஒரு உறுப்பாக இருக்கவேண்டுமென தாம் விரும்புவதாகக் கூறினாராம்.

மேலும், தம்முடைய அந்த 'திட்ட'த்தை எதிர்க்கட்சியினர் தெரிந்துகொள்ளுவார்களேயானால் தம்மை மிக வன்மையாகக் கண்டிப்பார்கள் என்று கூறியபோது எலிசபெத் அரசியார் சிரித்ததாகவும், ஜப்பான் முன்னாள் பிரதமர் யோஷிடா பத்திரிகைக் குறிப்பொன்றில் எழுதியிருக்கிறார்.

தென்னாட்டு விவசாயக் கல்லூரிகளுக்கு உதவி

அண்ணாமலைநகர், ஆக 8—

தென்னாட்டிலுள்ள விவசாயக் கல்லூரிகளுக்கு தொழில் நுணுக்கப் புத்தகங்கள், அயல்நாட்டுப் பத்திரிகைகள் போன்றவை வாங்குவதற்கு அமெரிக்காவிடமிருந்து 80,000 டாலர் (சுமார் ரூ. 3,80,000) கிடைக்குமாம்.

பாலாறு தண்ணீர்

இரு மாநில எஞ்சினீயர்கள் சந்திக்கின்றனர்?

சென்னை, ஆக. 9—

பாலாறு தண்ணீரை சென்னை, மைசூர் ஆகிய இரண்டு மாநிலங்களும் பகிர்ந்து கொள்வது பற்றி பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் நடத்த இரு மாநில பிரதம நீர்ப்பாசன எஞ்சினீயர்களும் விரைவிலேயே சந்திப்பார்களென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த பேச்சுவார்த்தைகள் மத்திய சர்க்காரின் ஆலோசனைப்படியே நடப்பதாகவும், இப்பேச்சு வார்த்தைகளின்போது தனிப்பட்டவர்களை சேர்த்துக் கொள்வது சாத்தியமாகாது என்று மைசூர் முதலமைச்சர் கூறியிருப்பதாயும் தெரியவருகிறது.

திரு-கொச்சி மாநில உபரி தண்ணீர்

மாநில அமைச்சர்களிடை பேச்சுவார்த்தை?

திருவனந்தபுரம், ஆக. 9—

வருகிற வெள்ளிக்கிழமையன்று, திரு-கொச்சி மாநிலத்தில் பாய்ந்து உபரியாகச் செல்லும் நீரை சென்னை மாநிலம் பயன்படுத்திக் கொள்வது குறித்துப் பேச்சுவார்த்தைகள் இரு மாநில மந்திரிகளிடையே நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநில சர்க்காரின் நிர்வாகத்தின் கீழ் உள்ள கொச்சி கோட்டைப் பிரதேசத்திற்கு திரு-கொச்சி மாநிலம் அதிக அளவில் நீர் வினியோகம் செய்ய வேண்டுமென்பது சம்பந்தமாக சென்னை அமைச்சர் மாணிக்கவேலரும், திரு-கொச்சி மாநில அமைச்சர் வேலாயுதனும் சந்தித்துப் பேசுவர் எனவும், அப்பேச்சுவார்த்தைகளின்போதே, திரு-கொச்சி மாநில உபரி நீரை சென்னை திருப்பிக் கொள்வது குறித்துப் பேச்சுக்களும் நடைபெறலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

'நடைமுறை விதி'கள் தளர்ந்தன!

புல்கானின் 'புது வழி'யைப் பின்பற்றினர்

மாஸ்கோ, ஆக. 7—

ரஷ்யப் பிரதமர் நிகோலாய் புல்கானின், இதுவரையிலும் இருந்து வந்துள்ள நடைமுறை விதிகளுக்கும் அப்பாற்பட்ட விதத்தில், அங்குள்ள பிறநாட்டுத் தூதவர்களுடன் தாராளமாக நெருங்கி உறவாடி, அளவளாவி விருந்து ஒன்றும் நடத்தியிருக்கிறாராம்!

முன்னொரு காலத்தில் காதரைன் என்ற அரசியாருக்குச் சொந்தமான அழகான பூங்கா ஒன்றில் அந்த விருந்து நடைபெற்றது என்றும் தெரிகிறது.

புல்கானின், அயல்நாட்டுத் தூதவர்களுடன் அளவளாவியது மட்டுமல்லாமல் அவர்கள் துணைவியருடனும் ஆனந்தமாக அளவளாவி அங்குள்ள இயற்கை அழகுகளைக் காட்டி இன்புற்றாராம்.

தாலுகா போர்டுகள் மீண்டும் உருவாகும்?

சென்னை, ஆக. 8—

தாலுகா போர்டுகளை ஏற்படுத்தும் பிரச்சினையைப் பரிசீலிக்க அடுத்த ஆண்டில் குழு ஒன்று நிறுவப்படுமென்றும், அதன் 'குறிப்பு' பரிசீலிக்கப்பட்டு இது பற்றி சர்க்கார் ஒரு முடிவுக்கு வருமென்றும், சட்ட சபையில் அறிவிக்கப்பட்டது.

பிறப்பு விகிதம் குறைகிறதாம்!

புதுடில்லி, ஆக. 8—

இந்தியாவில், வரவர குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே வருவதாக மத்திய துணை சுகாதார அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர், சென்ற 1941—50 ஆகிய 10 ஆண்டுகளில், இந்தியாவில் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 39.9 சதவிகிதமாக இருக்குமென கணக்கிடப்பட்டது; ஆனால், இறுதியில் அந்த ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளின் பதிவின் போது, அவ்விகிதம் ஆயிரத்திற்கு 27.5 சத விகிதம் என்ற விகிதத்திற்குக் குறைந்துபட்டிருந்தது என்றும், மேலும் சென்னைமாநிலத்தில், சென்ற 1930—52 ஆகிய ஆண்டு காலங்களில், மொத்தக் கணக்கிடப்பட்ட பிறப்பு விகித கணக்கின்படி, 1930—வது ஆண்டில் ஆயிரத்திற்கு 36.1 சதவிகிதமாகவும், ஆனால் 1952-ல், அத்தொகை, ஆயிரத்திற்கு 29.3 சதவிகிதமாகக் குறைவு பட்டுள்ளது என்றும் கூறியிருக்கிறார்.

எஸ். பூதலிங்கம்

இந்துஸ்தான் உருக்கு நிறுவன டைரக்டர் குழு தலைவரானார்

'இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனத்தின் டைரக்டர் குழுத் தலைவராக இருந்துவந்த எஸ். எஸ் கேரா என்பவர் தமது பதவியை இராஜினாமா செய்ததையொட்டி, மத்திய சர்க்கார் இரும்பு, உருக்கு இலாகா செயலாளரான ஐ. சி. எஸ். அதிகாரி எஸ். பூதலிங்கம் என்பார் மேற்படி குழுவின் தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலையை நிர்வகிக்க, சர்க்காரால் நியமிக்கப்பட்ட நிறுவனமே 'இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

போர்ச்சுகலின் புகார்

அமெரிக்காவின் உதவியை இந்தியா நாடுகிறதாம்!

புதுடில்லி, ஆக. 9—

கோவா பிரச்சினையை ஐ. நா. சபைக்குக் கொண்டுபோக, போர்ச்சுகீசிய சர்க்கார் முடிவு செய்துள்ளதாக இந்திய சர்க்காருக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிய வருகிறது.

இந்தியப் பகுதிகளிலிருந்து கோவாவிற்குள் இந்தியர்கள் நுழைவதாகவும், அதனை இந்திய சர்க்கார் நிறுத்துவதற்குத் தவறுமானால், பிரச்சினை ஐ. நா. சபைக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் போர்ச்சுகீசிய சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தாக்கீது ஒன்றை அனுப்பியுள்ளதாகச் செய்திகள் கூறின. இதனை மறுத்தே இந்திய சர்க்கார் அதிகார வட்டாரங்கள் கூறியுள்ளன.

மேலும், இந்தியா, கோவாப் பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்காவின் உதவியை நாடுவதாக கோவா வானொலி பிரச்சாரம் செய்துவருவதை டில்லி வட்டாரங்கள் மறுத்தன.

காலப்பருவ பயிறுவகைகள் மதிப்பீடு

நடப்பு ஆண்டில், கடலை, துவரை ஆகியவை நீங்கலான இதர காலப்பருவ பயிறுவகைகள் 1,04,98,000 ஏக்கராவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளதென்றும், மொத்தம் 19,77,000 டன் பயிராகுமென்றும் தெரியவருகிறது. 1953–54-ம் ஆண்டுக்கான ஓரளவு திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இந்த அளவுகள் முறையே 1,12,14,000 ஏக்கராவும், 20,89,000 டன்னுமாக இருந்தன.

சீன நாட்டின் முற்போக்கு வசதிகள்

இந்நாட்டிலும் செய்து தர அரசாங்கம் முன்வருமா?

ஏ. எஸ். இராஜன் பாராட்டு விழாவில் பொதுச் செயலாளர்!

5—8—55 மாலை 5 மணிக்கு, அண்மையில் செஞ்சீனா சென்று திரும்பிய அகில இந்திய தபால் சங்கத் தலைவர் திரு ஏ. எஸ். இராஜன் அவர்கட்குப் பாராட்டு வழங்கும் முகத்தான், சென்னை அஞ்சல் பிரிப்பகம், ஆர். எம். எஸ். ஊழியர்கள் சார்பில், சென்னை இராயப்பேட்டை 'உட்லண்ட்ஸ்' ஓட்டலில் தேநீர் விருந்தொன்று அளிக்கப் பெற்றது.

விழாவிற்கு தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், டாக்டர் பி. வரதராசலு, எம். எல். ஏ., அவர்களும் கலந்துகொண்டு, திரு. இராஜன் அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், சீனாவிற்கும் இந்தியாவிற்குமிடையே இருந்து வரும் நெடுநாள் தொடர்பை விளக்கியும், அந்தத் தொடர்பும் நட்பும் வளரவேண்டுமென்றும், அரசாங்கம் இதற்காக ஆவன செய்யுமென்றும், அந்த நாட்டிலுள்ள முற்போக்கு வசதிகளனைத்தையும் இந்நாட்டிலும் சர்க்கார் செய்துதர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் தோழர் ஏ. எஸ். இராஜன் பேசுகையில், சீனாவில் உள்ள தொழிற்சங்க, கலாச்சார, அரசியலமைப்பு ஆகியவற்றை விளக்கி சொற்பொழிவாற்றினார்.

திரு. ஏ. எஸ். இராஜன் அவர்களின் பணியினைப் பாராட்டி ஆர். எம். எஸ். ஊழியர்கள் சார்பில் அன்னாருக்கு வாழ்த்து இதழ் ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டது.

ஆசிய பகுதி நாடுகளுக்கு அமெரிக்க அபிவிருத்தி நிதி

இந்தியாவிற்கு சுமார் 20 கோடி ரூபாய் கிடைக்கும்?

புதுடில்லி, ஆக. 8—

ஆசிய அபிவிருத்திக்கென அமெரிக்கா ஒதுக்கியுள்ள 10 கோடி டாலர் நிதியிலிருந்து பங்கு பெற இந்தியாவிற்கு உரிமை உண்டு எனக் கூறப்பட்டிருக்கிறது.

அமெரிக்கக் காங்கிரஸ், சென்ற வாரத்தில் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னரேயே ஆசிய அபிவிருத்தி நிதியை அமைக்க அனுமதி அளித்தது. ஆசிய அபிவிருத்தி நிதியின் மொத்தத் தொகை சுமார் ரூ. 47½ கோடியாகும்.

இந்தியாவிற்கு அளிக்கப்படும் எந்தப் பொருளாதார உதவியும் 5 கோடி டாலருக்குமேல் இருக்கக் கூடாதென அண்மையில் அமெரிக்க நிதிக் குழு முடிவு செய்திருந்தது நினைவிருக்கலாம். இதன் மூலம் அமெரிக்க ஜனாதிபதியின் விசேட ஆசியப் பகுதிகள் அபிவிருத்தி நிதியிலிருந்து இந்தியாவிற்குப் பங்கு கிடைக்காது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால், தொழில் நுணுக்க உதவி நிதியாக அமெரிக்கா ஒதுக்கியுள்ள 1½ கோடி டாலரில் எதுவும் குறைக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆசியப் பகுதி நாடுகளின் அபிவிருத்திக்கான நிதியில் எந்த ஒரு நாட்டிற்கும், நிதியில் நால்பங்கிற்கு மேற்படாமல் கொடுக்கலாமென்று ஒரு சட்டப்பிரிவு இருந்துவருகிறது. எனவே, இந்தப் பிரிவின் கீழ் இந்தியா சுமார் ரூ. 11.875 கோடி பெறலாம் எனவும் கூறப்படுகிறது.

இத்தொகை, அபிவிருத்தி, தொழில் நுணுக்க உதவி நிதியுடன் சேராமல் தனிப்பட்ட முறையில் கிடைக்கக் கூடியது என்றும் தெரியவருகிறது.

தலைமை ஆசிரியையை தாக்கிய வியாபாரி

நீதிமன்றத்தில் வழக்கு

சென்னை, ஆக. 9—

சென்னை எழும்பூர் பெருமாள் கோவில் தோட்டத் தெரு ராஜாஜி ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியையான திருமதி துர்காபாய் என்ற 25 வயதுப் பெண்மணி, தனது வகுப்பு அறைக்குள் கடந்த ஜூலை 31-ந் தேதியன்று, கே. ஏ. ஜெகதீச முதலியார் என்ற வியாபாரி, கூறத் தகாத வார்த்தைகளால் இழித்துக்கூறி, தமது கன்னத்தில் அறைந்து தாக்கியதாக மாநில நீதிமன்றத்தில் வழக்கொன்று பதிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கடந்த ஜூலை 31-ந் தேதியன்று, அந்த வியாபாரி வகுப்புக்குள் நுழைந்து, 'இங்கே யார் ஐந்தாம் வகுப்பிற்கு பாடம் சொல்லித் தருவது?" என்று உரக்கக் கூவினாராம்.

தலைமை ஆசிரியை, 'நான்தான் பாடம்நடத்துகிறேன்'எனகூறவே, 'என் மகளை வகுப்பிலிருந்து வெளியேற்ற உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?' என்று கூவினாராம். அத்துடன் ஆசிரியையை, வகுப்பறையை விட்டு வெளியேறுமாறு, வாயில் வந்தபடி எல்லாம் திட்டினாராம்.

ஆசிரியை, அவரை அமைதியாக விஷயத்தைக் கூறுமாறு கேட்டிருக்கிறார்; 'வாயைத் திறக்காதே; பல்லை உடைத்துவிடுவேன்!' என்று வியாபாரி கூச்சலிட்டிருக்கிறார். ஆசிரியையும் நடுநடுங்கிப் போய்விட்டாராம். பின்னர், வியாபாரி, ஆசிரியையின் தலை மயிரைப் பிடித்திழுத்து, இடது கன்னத்தில் ஓங்கி அறைந்து, வகுப்பை விட்டு வெளியேற்றினாராம்!

இதற்கிடையில், இந்த அசம்பாவிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மாணவக் குழந்தைகள் கூச்சலிட்டிருக்கின்றனர்; உடனே பக்கத்து வகுப்புகளிலிருந்த மாணவர்களும், ஆசிரியர்களும் வகுப்புக்கு ஓடி வந்திருக்கின்றனர்; ஆசிரியையின் தகப்பனாரும் வகுப்புக்கு ஓடிவந்திருக்கிறார்; அந்த வியாபாரியைப் பார்த்து கூடியிருந்தவர்கள், 'ஏன் ஆசிரியையை அடித்தீர்கள்?' என்று கேட்டதற்கு, 'எனக்கு அதிகாரம் இருக்கிறது' என்று கூறினாராம். இது பற்றி உடனே பள்ளி நிர்வாகிக்கும் தெரிவிக்கப்பட்டதாம்.

வழக்கு ஆகஸ்டு 19-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதாம்.

உதவி பெறும் பள்ளிகளின்

ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி?

தருவதற்கு இயலாதென அமைச்சர் அறிவிப்பு

"ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினை பற்றி சர்க்கார் விரைவில் பரிசீலனை செய்ய இருக்கிறது; அப்பொழுது அது சம்பந்தமான எல்லா அம்சங்களும் கவனிக்கப்படும்," என்று சென்னை மேல் (சட்ட) சபையில், மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

"சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளிக்குமாறு சென்னை ஆசிரியர் கழகம் சர்க்காரிடம் கோரியது; இக்கோரிக்கையை ஏற்க இயலாதென சர்க்கார் தெரிவித்துவிட்டது; சென்னை நகரில் மட்டும் அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி தருவதானால், ரூ. 3 லட்சம் செலவாகும்; ஆசிரியர்கள் துயரை, சர்க்கார் அறியாமலில்லை; ஆனால் சர்க்கார் நிதி நிலைமையையும் கவனிக்க வேண்டியுள்ளது," என்றார்.

"சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளில்பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வைத்திய வசதியைப் பரவலாக்குவது பற்றியும் சர்க்கார் ஆலோசித்து வருகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

காணாமற்போன ஆங்கிலப் பெண்மணி

சென்னையில் பிடிபட்டார்

சென்னை, ஆக 9—

34 வயதுடைய திருமதி டிக்சன் என்னும் மாது, 'திருமதி மேரி ஹபீப்' என்ற மாற்றுப் பெயருடன் சென்னை வந்து பைக்ராப்ட்ஸ் சாலையில் உள்ள ஒரு முகமதியர் ஓட்டலில் தங்கியிருக்கையில் போலீசாரால் பிடிபட்டிருக்கிறார்.

சென்ற 3-ந் தேதி முதலே அவரைக் காணவில்லை என்று அப் பெண்மணியின் கணவர் டிக்சன், கல்கத்தாவில் புகார் செய்ததுடன், நேற்று சென்னை வந்து, தமது மனைவியாரையும் அடையாளம் கண்டுகொண்டாராம். உடனே, போலீசாரின் உதவியுடன் தமது மனைவியை அழைத்துச் சென்றார் எனக் கூறப்படுகிறது.

மேலும், திருமதி டிக்சன், அலிப்பூரில் காணாமற்போன அதே நாளில், அவர்கள் வீட்டில் சமையல்காரனாக வேலை பார்த்து வந்த ஹபிபுல்லா என்ற 24 வயதுடைய பாகிஸ்தானி ஒருவனும் காணப்படவில்லை என்றும், ஆனால், அதே நபரும் சென்னையிலுள்ள மேற்படி ஓட்டலில் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

சமையல்காரனான ஹபிபுல்லாவை காவலில் வைத்திருக்கும்படி சென்னை குற்ற இலாகா போலீஸ் டெபுடி கமிஷனர் உத்தரவிட்டு, மேற்கு வங்க போலீஸ் இன்ஸ்பெக்டரான கங்குலி என்பாரிடம் ஒப்படைத்திருக்கிறார்.

நீலநிறக் கண்களும், பழுப்புநிற தலை மயிரும் கொண்ட தமது மனைவியான திருமதி எட்னா மேரி டிக்சன் என்பவர், ஒரு கைப்பை, காமிரா, ரொக்கம் ரூ. 1000 ஆகியவற்றுடன் ஆகஸ்ட் 3-ந் தேதி முதல் காணப்படவில்லை என்று கல்கத்தா போலீசிற்கு எர்னஸ்ட் டிக்சன் புகார் செய்திருந்தார்.

சென்னை நகர சபை தேர்தல் நிலைமை

4 பேருக்கு போட்டியில்லை

சென்னை, ஆக. 10—

சென்னை நகர சபை தேர்தலுக்கான அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வது நேற்றுடன் முடிவடைந்தது.

நகர சபை கமிஷனர், 16, 17-ந் தேதிகளில் அபேட்சைப் பத்திரங்களை பரிசீலனை செய்வார்.

63 இடங்களுக்கு 228 பேர் போட்டியிடுகிறார்கள்; இதில், நால்வருக்குப் போட்டியில்லை.

செப். 20-லிருந்து வாக்குப் பதிவு ஆரம்பமாகி 24-ந்தேதி முடியும்; 26-ந் தேதி காலை 9 மணிக்கு வாக்குகள் எண்ணிக்கை ஆரம்பமாகும்.

50 பொது இடங்கள்; 5 அரிசன, ரிசர்வ் இடங்கள்; 4 பெண்கள் ரிசர்வ் இடங்கள்—ஆக 59 இடங்களுக்குத் தேர்தல் நடைபெறும். இது தவிர, தொழிலாளர்களுக்கென 4 இடங்கள் உள்ளன.

டிராம் தொழிலாளர் அப்பீலில் தீர்ப்பு

பம்பாய், ஆக. 9—

'மூடப்பட்டுவிட்ட சென்னை டிராம் கம்பெனியின் சேமிப்பு (ரிசர்வ்) நிதியில், அக்கம்பெனியின் தொழிலாளர்களுக்குப் பங்கு உண்டு' என்று, சென்னை தொழில் மன்றம் அளித்திருந்த தீர்ப்பை இந்தியத் தொழில் அப்பீல் மன்றம் ரத்து செய்துள்ளது.

ஆனால், ஆட்குறைப்பு நஷ்டஈட்டின் மொத்த அளவை அப்பீல் மன்றம் உயர்த்தியிருக்கிறது; இதன்படி, பூர்த்தியான ஒவ்வொரு ஆண்டு 'சர்வீசு'க்கும் அரை மாத அடிப்படை சம்பளம் என்ற விகிதத்தில், உயர்ந்தபட்ச வரம்பு எதுவுமின்றி நஷ்டஈடு பெறலாம்.

ஆசைக்கு அளவுதான் ஏது?

வடவரின் 'இந்தி மொழி வெறி'

ஐ. நா. அலுவல் மொழியாகவும் இந்தி ஆக்கப்படும்?

புதுடில்லி, ஆக. 9—

"இந்தி மொழியை ஐ. நா. சபையின் 5-வது அலுவலக மொழியாக ஆக்குவதற்கு இந்திய சர்க்கார் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?"

என்று, மக்கள் சபையில் சேத் கோவிந்தாஸ் எனும் உறுப்பினர் கேட்டிருக்கிறார்.

"நோபல் பரிசு பெற இந்தி மொழி புத்தகங்கள் அனுப்பப்படுமா?"—என்றும் அவர் வினவியிருக்கிறார்.

கல்வி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், பதிலளிக்கும் முறையில், இந்தியா சுதந்திரம் அடைவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னர், ஒரு இந்தியப் புலவர், இந்திய மொழி ஒன்றில் புத்தகம் எழுதி நோபல் பரிசு பெற்றுள்ளார் என்றும், அப்பரிசு பெற இந்தி மொழிப் புத்தகங்கள் அனுப்பத் தடையில்லை என்றும் கூறியிருக்கிறார்.

தமிழ் மன்றம்

(பச்சையப்பன் கல்லூரி, சென்னை)

துவக்க விழா

☆

11-8-55 மாலை **3-20** மணிக்கு, சென்னை, பச்சையப்பன் கல்லூரிப் பொது மண்டபத்தில், திரு. சா. அமீது தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தமிழ் மன்றத்தைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

தி.மு.க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

அருப்புக்கோட்டை வருகை

14—8—55 மாலை **6** மணிக்கு, அருப்புக்கோட்டை, பாண்டியன் திடலில், W. P. A. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

சைதாப்பேட்டை (சென்னை) தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

11—8—55 மாலை 7 மணிக்கு சைதாப்பேட்டை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழக இல்லத்தில் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு பரிசீலிக்கப்படும்.

கண்ணகி விழா

11—8—55 வியாழன் மாலை 4 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்து கிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில், கண்ணகி விழா முதல் நாள் நிகழ்ச்சி திருமதி டாக்டர் எஸ். தருமாம்பாள் தலைமையில் நடைபெறும். திருமதிகள் ஜே. சாரதாம்பாள், அனுசுயா மோகனசுந்தரம், பார்வதி, வ. பா. தாமரைக்கண்ணியார், கே. வி. சண்பகம் ஆகியோர் பேசுவர்.

14—8—55 ஞாயிறு மாலை 5½ மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, கொண்டலையர் தெரு, பழனியாண்டவர் கோவில் மண்டபத்தில், கண்ணகி விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சி, திரு. மயிலை சிவமுத்து தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் வல்லை-பாலசுப்ரமணியம், சிறுவை-மோகனசுந்தரம், அழகுவேலனார், தணிகை-உலகநாதன், கோ. வில்வபதி ஆகியோர் பேசுவர்.

'அண்ணாதுரை'

'தென்றல்' ஆசிரியர் தோழர் கண்ணதாசன் துணைவி பார்வதி அம்மையாருக்கு, ஜூலை **22**-ம் நாள் பிறந்த ஆண் மகவுக்கு 'அண்ணாதுரை' எனப் பெயரிடப்பட்டது.

கம்பெனிகள் மசோதா: சர்க்கார் நிலைமை

புதுடில்லி, ஆக. 10—

12-ந் தேதிக்குள் மக்கள் சபையில், இந்தியக் கம்பெனிகள் சட்டத் திருத்தத்திற்கான இரண்டு மசோதாக்கள் கொண்டுவர இந்திய சர்க்கார் ஆலோசித்துள்ளனராம்.

வருமான இலாபம் இல்லாத பட்சத்தில் கம்பெனிகள், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000-வரை தொழிலாளர்களுக்குத் தரப்பட வேண்டும் என்றும், தொழிலாளர்களுக்குத் தரப்படும் இந்த ஊதியம் மொத்த இலாபத்தில் 11 சதவிகிதமாக இருக்க வேண்டுமென்பதும், இந்தக் 'கெடுபிடி'யான நிலைகள் மிகவும் கஷ்டமாக இருப்பதாகத் தகுந்த ஆதாரங்களுடன் காட்டப்பட்டால், சர்க்கார் தனது அதிகாரத்தை உபயோகித்து, அவற்றின் 'கெடுபிடி'யை ஓரளவுக் குத் தளர்த்தும் என்பதுமே அம் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பாக். அரசியலில் திடீர் மாறுதல்

கராச்சி, ஆக. 9—

முஸ்லிம் லீக் கட்சித் தலைவரான சௌத்ரி முகம்மது அலி, பாகிஸ்தானில் கூட்டு மந்திரி சபை அமைப்பதில் தன்னுடன் ஐக்கிய முன்னணியைச் சேரச் செய்வதில் வெற்றி பெற்றுள்ளாராம்! தற்காலிக கவர்னர்-ஜெனரலான இஸ்கந்தர் மீர்சா முன்னிலையில், இது பற்றி உடன்பாடு தெரிவித்தும் உள்ளனராம்.

கவர்னர்-ஜெனரல், எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்துகிறாராம்; முக்கூட்டு (லீக்—ஐ மு.—அவாமி லீக்) சர்க்கார் அமைக்க, சுகரவர்த்தியை இணங்கச் செய்யவும் முயற்சி செய்யப்படுகிறதாம்.

மந்திரிசபை அமைப்பதற்கு சௌத்ரி முகம்மது அலி அழைக்கப்படக்கூடும்.

புதிய வால் நட்சத்திரம்

பூமியை நெருங்கி வந்து கொண்டிருக்கிறதாம்

சென்ற ஜூலைதிங்கள் 29ந்தேதி தோன்றிய புதிய வால்நட்சத்திரம் ஒன்று, பெரும்பாலும் இத்திங்கள் 12-ந் தேதிக்குள் எல்லாரும் பார்க்கக்கூடியதாகத் தெரியும் என்று டோக்கியோவிலுள்ள யாமா மோட்டோ வான ஆராய்ச்சி நிலையம் அறிவித்திருக்கிறது.

அந்த வால் நட்சத்திரம் பூமியை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது என்றும், அதனுடைய பிரகாசமும் வரவர அதிகமாகிக் கொண்டே வருவதாகவும் அந்த நிலையம் அறிவித்திருக்கிறது.

இப்போது இயலாதாம்

சென்னை, ஆக. 8—

பசுக்கள் உட்பட்ட கால் நடைகளை சென்னை நகர எல்லைக்குள் வைத்திருக்கக்கூடாது என்று இப்போது சர்க்கார் தடையொன்றும் விதிக்க இயலாது என்று, அமைச்சர் பக்தவத்சலனார், சென்னை மேல்சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்.

பழையன கழிந்து புதியன வந்தால்...

நிலைமை சரியாகிவிடுமாம்!

'சென்னை மாநிலம் முழுமையிலும் பஸ் போக்குவரத்தை சர்க்கார் மேற்கொள்ளுமா?' என்று, சென்னை மேல் (சட்ட) சபையில் எழுந்த கேள்விக்கு, அமைச்சர் பரமேசுவரன், 'சென்னை நகர பஸ் போக்குவரத்து சரிவர அடைந்த பின்பே, அதுபற்றி கவனிக்கப்படும்,' என்றார்.

'ஆர்டர்' கொடுத்துள்ள புதிய பஸ்கள் வந்துவிட்டால், நிலைமை சீர்பட்டுவிடும்; அதுவரையில் இங்குமங்குமாக பஸ்கள் பழுதாகி விடுவது இருக்கத்தான் செய்யும்,' என்றும் அவர் குறிப்பிட்டார்.

'1955 ஜூலை முதல், நகரில், 398 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன; இவைகளில் 119 பஸ்கள் பலவகைகளில் பழுதடைந்துவிட்டன; ஆனால், அந்நிலைமை குறைந்துகொண்டே வருகிறது,' என்றும் அவர் குறிப்பிட்டார்.

குற்றாலம்: உல்லாச இடமாக மாறுமாம்!

மத்திய ஆட்சியின் உதவியுடன், திருக்குற்றாலத்தை, ஒரு உல்லாசப் பிரயாண இடமாக அபிவிருத்தி செய்ய சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்தார்.

தென்னாட்டுக்கு தனி தொழில் மன்றம்?

"தென்னாட்டில் பாக்கியுள்ள தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு, தனித் தொழில் மன்றம் நியமிப்பது பற்றி இந்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருகின்றனர்; இதற்காக, ஒரு நீதிபதியை ஒதுக்குமாறு திரு-கொச்சி சர்க்காரை இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கிறது," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

அவசியத்தை வற்புறுத்த அவர்களும் செல்வர்?

சென்னை நகர சபைக்கு ரூ. 12,29,00,000 நிதி உதவி அளிக்க வேண்டியதின் அவசியத்தை திட்டக் குழுவிடம் நேரில் வற்புறுத்த மேயர், நகர சபை கமிஷனர் ஆகியோர் கொண்ட குழு ஒன்று செல்வதென சென்னை நகர சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆண்களை நம்பியே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தன்' என்ற 'புனிதக்' கயிறைக் கட்ட மறுத்துவிட்டதாக ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

'ரட்ச பந்தன்' என்ற கயிற்றை பெண்கள், தங்களுக்கு உற்றவர் கரத்தில் கட்டுவதானது, 'தன்னைக் காப்பாற்ற வேண்டுமென பெண் கேட்டுக் கொள்வதாகும்' என்று, இந்து மத வழக்கம் கூறுகிறதாம்.

இந்தக் கருத்தைத்தான், அந்தப் பெண்மணி ஏற்றுக்கொள்ள மறுத்து, கயிறு கட்டவும் மறுத்துவிட்டாராம்.

'ஆண்களும் பெண்களும் சமமே' என்ற கொள்கை நிலவும் இந்தக் காலத்தில், 'ரட்ச பந்தன்' கயிறு கட்டுவது, பெண்மையைப் புண்படுத்துவதாகும்,"

என்று, உள்ளூர் பத்திரிகையாளர் ஒருவரின் மனைவி தெரிவித்திருக்கிறாராம்.

'ரட்ச பந்தன்' முறையை எதிர்த்து, இதர பெண்களையும் போராட அவர் அழைத்திருக்கிறாராம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.